உ

கடவுள் துணை

# வ ரா கி மா லை

## மூலமந்திர யந்திரத்துடன்

இஃது

M. N. பாலகுருசாமி அவர்களால்

ஆந்திரீகமாயுள்ள மாந்திரீகத்தை வரையப்பட்டது

பிரசுரகர்த்தர் :

S. V. முருகேச முதலியார்

கிடைக்குமிடம் :

சண்முகானந்தா புக் டிப்போ

67, T. K. முதலி தெரு,

சூளை, சென்னை-112.

ரிஜிஸ்டர் காபிரைட் விலை ரூ 12

உ

சிவசத்தியே நம

# ச க் தி க் க வ ச ம்

(இதை நித்தியக் கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்துக் கொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே சக்தியை தியானித்து இதைச் ஜெபிக்க வேண்டும் இதனால் பலவித காரிய சித்திகளும் மாந்திரீக வல்லுனராகவும் சகல அஷ்டமா சித்துகளும் அடையலாம்)

சராசரமெல்லா மீன்ற சத்தியடிகள் பராவி

பங்கயத் திருவே பராபர ஒளியே (மனமே பணி
யிங்கித பொருளே யேந்திழை யாளே
கங்கையில் ஞானத்தத்துவ முதலே
பொங்கர வணிந்த புரிசடையாளே
எங்கணு நிறைந்த எண்டோளி நீலி
கங்காளி கௌரி கரதலு கபாலி
மங்மா தங்கி வராகியானந்தி
சங்கரி துர்க்கை சதுமறை முதலி
மூர்க்கதா ருகனை முடி துணிந்தவளே
மார்க்கமாக தொண்டர் மனதிநிற் பவளே
ஏற்குமிவ் வுலகி லேகமா னவளே
தீர்க்கமா யண்டர் திசை படைத்தவளே
காக்கவிவ் வுலகங்கள் கண்விழித்தவளே
பாற்கடல் புவிவரன் பரவி நின்றவளே
சூர்ப்பகை தொலைத்த சுந்தரி யகோரி
மார்க்கமில் மகிடமர்த்தனி யுமையே
ஏகாட் சரத்தீனியல் வறிந்தவளே
சாகா மருந்தைத் தந்துகாத்தவளே

RangaRakes

tamilnavarasam.com

நீரணி சடைச்சி நித்தியானந்தி
வீரிவே தாளி விசையைய்ந்தரியே
கலையானனத்தி கலையூர் திகன்னி
மலைமகள் சமரி மாறகினை யவளே
விமலவித்தை வீரச்செல்வி
சமரசவேத சக்கரா யுதத்தி
வேலை விடத்தை விழுங்குவோன் முதல்வி
பாலைச்கிழத்தி பரவு முக்கிணத்தி
வாலை வராகி வாள்கை கொண்டவளே
ஞாலம் படைத்த தங்கை யம்பிகையே
அன்னை நின்னும் அளவறிந் தெடுத்து
உன்னியிங்குரைக்க லூறுமதி யில்லேன்
கனைக்கால் முழந்தாள் கங்காளி காக்க
பனை துடையிரண்டும் பகவதிகாக்க
இடுப்பொடு குய்யம் எண்டோளி காக்க
தொடுத்திடு நாபி சூலியே காக்க
நெஞ்சுமார் பிருதோன் நின்றலி காக்க
நஞ்சுள் கண்டம் நாயகி காக்க
பேசிடு நாப்பல் பிரேகிய காக்க
நாசிகளிரண்டும் நாரணி காக்க
இருசெவி யெழிலார் ஈஸ்வரி காக்க
பருவிழி யிரண்டும் பகவதி காக்க
நெற்றியுஞ் சிரசுஞ் சத்தி நீ காக்க
பற்றிய முதுகு பார்வதி காக்க
பக்க மிரண்டும் பரையே காக்க
சக்கரா யுதத்தி சந்திரனைக் காக்க
திரு நீ றெடுத்து தேகத்திற்றூவி
வருபகை யரணியின் வாயைக்கிழித்து
பில்லிகற்றவரைப் பிகுத்தே யிறுக்கி
பல்லைப்பிடுங்கி பதைத்திட வடிப்பாய்



ஓரெழுத்து தாகிய உலகினைப் படைத்து
ஈரெழுத்தாகியெங்கணு நிறைந்து
முதெழுத்தான மச்சட ரொளியே
நான்கெழுத்தனில் நடித்திடு பதத்தி
பஞ்சாட்சரத்திற் பதிந்த மெய்ப்பொருளே
சஷ்டாட் சரத்திற் கரமாய் நின்று
அக்ஷந்தோறு மரும் பொருளாகி
முக்கோணத்தின் முதன்மை யானவளே
நாற்கோணத்தினடு நிலைப் பொருளே
ஐங்கோணத்தி லருபியானவளே
அறுகோணத்தி லுருபவாளேய்
எண்கோணத்தி லிலகு மெய்ப் பொருளே
எண்ணைந்துமூன்றி னிகபரவொளியே
விண்ணைந்து பூதவெளியே வுமையே
தத்துவ முடிவே சருவமா னவளே
கற்றுணர்ந்தோர்க்கு கைவிள்க்கொளியே
பக்தியற்றோரைப் பாராதவளே
புத்தியற்றோரைப் பிளந்த கோடாரியே
சத்து முத்தான சங்கரி கௌரி
முத்தியின் முதலே முச்சுடரொளியே
சக்தியொன்றாகிச் சமயங்கள் வேறாய்
நித்தியானந்த நின்மல சொருபி
ஐயையெண்டோளியலகையின் கொடியோய்
பகவதி துர்க்கை பாசாங்கு குசத்தி
இகபர சுகத்தி யிருளொழிப்பவளே
குண்டலி குமரி குருக்கேத் திரத்தி
சண்டிகை சூலி தாருக விறைசனி
மாயவல் லணங்கு மதுபதி சூரி
நேயரைக்காக்கும் நித்யகல்யாணி
நாரணி யெனுயென் நாவிலிருப்பவளே
தாரணி கிருபா ஹரிபகவதியே

RangaRakes
tamilnavarasam.com

வஞ்சகம் பேசும் நெஞ்சைப் பிளந்து
அஞ்சிபின் னோட அலகை நின்றாட
நாய்நரி புலம்ப நாட்டுவாய் சூலம்
பேய்பில்லி யாவும் பின்னிடத் துரத்தி
மைந்தனைக் காக்க மாதா வருக
பத்தியா யுனது படைகளும் வருக
வக்ர துண்டன் குகன் வயிரவன் வருக
சக்ரா யுதனுடன் சதுர்முகன் வருக
ஐயன் பிடாரி அனைவரும் வருக
வையக தேவதை வருக விங்ஙனமே
அறிந்த தேவதைகளறியா தவைகள்
தெரிந்த தேவதை தெரியா தவைகள்
யாவரும் வருக ஆட்சியாயிங்கு
தேவரும் வருக தேவி நின் கொலுவில்
அடித்திடும் மணிசிலம் பசைக்குறையாமல்
படித்திடுபாட்டிற் பதங்குறையாமல்
செந்தமிழ் மாரிசித்தியே துதிக்க
பைந்தயிமி வாணர் பார்த்ததி சயிக்க
மைந்தன் வாக்கினில் தாய்மாறா திருக்க
அஷ்டதிக்குள்ள அரும்பெரும் புலவன்
இஷ்டர்களாகி யெனக் குறவாகி
துஷ்டநர் மூடர் தொலைந்து போக
கஷ்டம் விலக்கிகருணைசெய்திடுவாய்
சுந்தரி யகோதரி தோகாய் சரணம்
அந்தரி கவுரி அம்பிகை சரணம்
அருள்தர அடியேற் காதியே சரணம்
சரணம் சரணம் சங்கரீ சரணம்

சக்திக் கவசம் முற்றிற்று

RangaRakes

உ

# வராகி மாலை

## மூலமந்திர யந்திரத்துடன்



## காப்பு

ஆதியென்ற மூலமந்திர மைந்தெழுத்தை
அன்புடனே மனதில் வைத்து ஓங்காரத்தை
நீதியுடன் ருள் பணிந்து பெருநூல் தன்னை
நிகழ்த்துதற்கு ஐங்கரன் றன் பாதங்காப்பு
சோதியென்றசுழிமுனையைத் தியானஞ்செய்து
சுந்தரமாய்ப் பிராணாயம் விரித்துரைக்கப்
பாதிமதி யணியீச னுமையாள் காப்பு
பக்தியுள்ள வாலையின்றன் பாதங்காப்பே



tamilnavarasam.com

# விநாயகர் ஸ்தோத்திரம்

பிரணம்யா சிரசா தேவம் கௌரி புத்ரம் விநாயகம் க்தா வாஸம் ஸமரேன் நித்யம் ஆயுர்க மார்த்த சித்தயே.

# மூலமந்திரம்

ஓம் ஆதிமூலத்திகிரியும் கணபதியே நம
கெங் கங் கணபதி அங் சுங் குரு குரு
விரி விரி கணபதி கிரியும் விரியும்
நான் நினைந்த தெல்லாம் என் வசமாக

# ஜெபிக்கும் மந்திரம்

இந்த மந்திரத்தை கிழக்கு முகமாக உட்கார்ந்து சந்தமும்சிந்தையேதின்மயத்தில் 1008உருஜெபிக்கவும் இதற்குப் பூசை பால் பழம் தேங்காய் அவல் கடலை சந்தி முத்தி மாவிளக்கு பாயாசம்இவைகளை வைத்து இது போல காலை பகல் மாலை நடுராத்திரியாக ஒருமண்டலம் பூசிக்கசித்தியாகும் இந்தவிநாயகர் வசியத்தால் அஷ்டமா சித்தியும் அஷ்டகர்மமும் கரதலா கமலம்போல் நடைபெறும் இதில்



கணபதி வசியமாம் சக்கரம் ஐங்கோணத்திற் சூலமிட்டு ஐந்தெழுத்து சுற்றிலுமெழுதி நடுவில் வயநமசி எழுதவும்,

# வராகிமாலை பூஜாவிதி

இந்த வராகிமாலை யென்னும் சிறந்த மந்திர ஸாஸ்த்திரத்தை படித்து அனுஷ்டானத்திற்கு கொண்டு வரும் அன்பர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய சில விஷயம் என்னவென்றால் சத்தியம் தர்மம் காமத்தை அடக்குதல் பொய் சொல்லாமை கோபமில்லாமை ஈகை இந்த குணங்கள் கட்டாயம் அமையப் பெற்றவர்களாய் இருக்க வேண்டும் பாட்டும் மூலமந்திரமும் சேர்த்துதான் ஜெபிக்க வேண்டும் ஒன்றை விட்டு ஒன்றை ஜெபித்தால் பலன் கிடையாதுயந்திரதோடு எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி பூஜை நெய்வேத்தியம் தான் ஒவ்வொன்றையும் தனித்தனியாக. செய்து சித்திப் பெறலாம் முதல் மந்திரத்திற்கு சொல்லிய த்யானம் பீஜசக்தி கலகம் ந்யாஸம் இவைகளே எல்லாவற்றிற்கும் உபயோகப் படுத்தி கொள்ளவும் பௌர்ணமி காலங்களில் பூஜை ஆரம்பிக்க வேண்டும் சூரியஉதயத்திற்கு முன்பும்பூஜையைமுடித்துவிட வேண்டும் யந்திர தகட்டிற்கு பால் இளநீர் பஞ்சகவ்வியம்

RangaRakes
tamilnavarasam.com

பன்னீர் இவைகளால் அபிஷேகம் செய்து புனுகு ஜவ்வாது அத்தர் இவைகளை தடவிசந்தனம்குங்குமம் பொட்டு வைத்து ஒரு பீடத்தின் மேல் வைத்து குத்து விளக்கு பொரித்து வைத்து செவ்வலரி புஷ்பம் சாத்தி தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு சுண்டல்வடை சக்கரைப் பாயசம்கற்கண்டு தேன் இவைகளை நிவேதனமாக வைக்க வேண்டும் குரு நாதன் கணேசன் அவரவர்கள் குலதெய்வத்தை பூஜை செய்து ஏகாக்ர சித்தனாக யிருந்து ஒரு மண்டலம் ஜெபிக்க இந்நூலில் சொல்லிய எல்லா விதமான பிரயோகங்களும் சித்தியாகும்

# வராகி த்யானம்

வராக முகம் சந்திரக் கலையோடுக் கூடிய ரத்தினக்கிரீடமும் நீலமேனியும் கோடி சூரியனைப் போன்ற ப்ரகாசமும்எட்டுக்கரங்களில்சங்கு சக்கிரம் கதை கட்கம் சூலம் முசலம்அபயம் வரதமும் சர்வ ஆபரண பூதிதையாய் அஷ்ட பைரவர்கள் பூதப்

RangaRakes



படைகள் அநேக கோடி சக்திப் பரிவாரங்களோடு ரத்ன மயமான சிங்கா தனத்தில் வீற்றிருக்கும் வராகி தேவியை நான் த்யானம் செய்கிறேன்

இந்த யந்திரத்தை செப்புத் தகட்டில்வரைத்து அஷ்டகந்தத்தால் அபிஷேகம் செய்து சந்தனம் குங்குமம் அத்தர் புனுகு ஜவ்வாது பூசி ஒரு தனி அறையை சுத்தப் படுத்தி கும்ப கலசம் வைத்து அதற்கு மேல் தேங்காய் வைத்து கும்பத்திற்கு மஞ்சள் குங்குமம் வைத்து அக்ஷதையும் போட்டு கும்பத்திற்கு முன்பு ஒரு பீடம் வைத்து அதன் மேல் யந்திரம் வைத்து எதிரில் புலித்தோல் ஆசனம் விரித்து அதன் மீது கிழக்கு முகமாக அமர்ந்து சங்கல்பம் ந்யாசம் த்யானம் முறையாக செய்து செம்பகரி புஷ்பத்தினுல் தினம் 1008-உரு வீதம் ஒரு மண்டலம் செபிக்க சித்தியாகும் அஷ்டசித்தியும் உண்டாகும் மஹா ஞானியாவான்.

# மூலமந்திரம்

ஓம் ஐம் க்லீம் ஐம் நமோ பகவதீ வார்த்தாளீ வார்த்தாளீ வராகி வராகி வராகமுகி வராகமுகி அந்தோ அந்தினிருதோருந்தினிஜம்போ மோஹோர்

tamilnavarasam.com

மோஹனீ ஸ்தம்போ ஸ்தம்பினி சதுர்வஷ்ட பிரதுஷ் டாஞும் சர்வேஸாம் சர்வாச்சித்தம் ஷட்கர் முககதி ஜிக்ன ஸ்தம்பனம் குரு குரு சீக்கிரம் வசியம் ஐம் க்லீம் ஐம் ட;ட;ட;ட;ட; ஹூம்பட் ஸ்வாஹா,

## வராகி மஹா யந்திரம்



## வராகி மஹா மந்திரம்

ஓம் அஸ்யஸ்ரீ வராகி மஹா மந்த்ரஸ்ய பகவான் பைரவரிஷித்ருஷ்டிப் ஸந்த வராஹி



மஹா சக்திதேவதாக்லீம் பீஜம்க்லாம் சக்திகலூம் கீலகம்மமஸ்ரீ வராகி மஹா சக்தி பிரசன்ன ஸித்தியர்த்தே ஜெபே விநியோகஹா

## ந்யாஸம்:

ஐம்—அங்குஷ்டாப்யாம் நமஹ
க்லீம்—தர்ஜ்ஜனிப்யாம் நமஹ
சௌ —மத்யமாப்யாம் நமஹ
ஐம்—அனுமிகாப்யாம் நமஹ
க்லீம்—கனிஷ்டகனிஷ்டகாப்யாம் நமஹ
சௌம்—கரதலக்ரப்ருஷ்டாப்யாம் நமஹ

## த்யானம்:

ஐம் ஹ்ருதயாந நமஹ
க்லீம்சிரசே ஸ்வாஹ
சௌம் சிகாயை வஷட்
ஐம் கவசாயஹூம்
க்லீம் நேத்ராய வௌஷட்
சௌம் அஸ்த்திராயபட்
பூர்புவஸ்ரோ அதி திக்பந்த

RangaRakes tamilnavarasam.com

## வராகி மந்திரம்

ஓம் ஸ்ரீ ஸ்ரீயும் உவ்வும் தேவிவரகிரா வராகி வங் ஹரீம் சவ்வும் ஐயும் சுவாஹா உருவு 108

## வாலை பரமேஸ்வரி மந்திரம்

ஓம் சவ்வும் கிலியும் ரா ரா ஓகோ கோ கிறீம் ஸ்ரீ அறீம் வாலை ரா ரா யங்கி மன் அம் அங்குசாயா அவள் வாய் அம்மணி தாயி ரா ரா என்று 108 ஜெபிக்க சித்தியாகும்.

## வராகி பூஜை மூல மந்திரம்

ஓம்-ஸ்ரீம்-ஹரி ஹரி சக்கிரம் ஹரப்பிரகாச சக்கிரம் திரி திரி சக்கிரம் திரிபுர சக்கிரம் ஓம் பத்திர காளி சத்துரு சங்காரி மகிடாசூர மர்த்தினி ஐயும் கிலியும் ரீம் உம்-படு சுவாஹா 108-உருவு ஜெபிக்க சகலமும்சித்தியாகும்.



## வசியம்




இரு குழை கோமளந் தாள்புட்ப
ராக மிரண்டு கண்ணும்
குருமணி நீலங்கை கோமேதக
நகங் கூர்வயிரம்
திருநகை முத்துக்கனிவாய்
பவளஞ் சிறந்தவல்லி
மரகத நாமந்திருமேனி
யும்பச்சை மாணிக்கமே
3

RangaRakes tamilnavarasam.com

# மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்கம் கணேஸ ரிவத்ரி சூலி ஹும்பட் ஸ்வாஹா உருவு 1008.

இந்த யந்திரத்தை செப்பு தகட்டில் எழுதி பால் இளநீர் பஞ்சாமிர்தம் சந்தனம் பன்னீர் இவைகளால் அபிஷேகம் செய்து ஒரு இடத்தில் சுத்தமாக மெழுகி கும்பம் வைத்து கும்பத்திற்கு நூல் சுற்றி மாவிலை தேங்காய் வைத்து சந்தனம் குங்குமம் வைத்து புஷ்பத்தால் அலங்கரித்து தூப தீப நைவேத்தியம் காட்டி ஷெ கண்ட மூலமந்திரத்தை 1008-உரு வீதம் பன்னிரண்டு நாள்ஜெபிக்க சித்தியாகும் சகலமும் வசியமாகும் பால் பொங்கல் சுண்டல் நிவேதனம்





# தரிசனம்



தோராத வட்டமுக் கோணசட்
கோணத் துலங்குவட்டத்
தீரா றிதழிட்டு ரீங்கார
முள்ளீட்டிது நடுவே
ஆரா தனைசெய் தருச்சித்துப்
பூசித் தடி பணிந்தால்
வாரா திராளல்ல ளேவாலை
ஞான வராகியுமே

RangaRakes
tamilnavarasam.com

## மூலமந்திரம்

ஓம் அம் க்லீம் சௌம் ஐம் திரிபுவனேஸ்வரீ வராகி ஹும்பட் ஸ்வாஹ உருவு 1008.

இந்தயந்திரத்தை தாம்பூரத் தகட்டில் எழுதி விதிப்படி அபிஷேக ஆராதனை செய்து மஹா நைவேத்தியம் வைத்து 1008-உருவு ஜெபிக்க சித்தியாகும்

## தர்பணம்






மெய்சிரத்திற்பணி யார்மனங்
  காய மிகவெகுண்டு
கைச்சிரத் தேந்திப் புலாலிணை
  நாறக் கடித்ததுதறி
வச்சிரத் தந்த முகப்பணி
  யாற்குத்தி வாய்கடித்துப்
பச்சிரத் தங்குடிப்பாளே
  வராகி பகைஞரையே

## மூலமந்திரம்

ஓம் நீலி கபாலி ரீங் சிங் சிங் பைரவி வா வா உருவு 1008.

இந்த யந்திரத்தை செப்புத் தகட்டில் எழுதி வாசனைத் திரவியங்களால் அபிஷேகம் செய்து பத்மா ஸனத்தில் உட்கார்ந்து புதன்கிழமையில் ஜெபிக்கவும் 1008 உரு ஜெபிக்க தம்பனம்சித்தியாகும் வியாதி, பேய், பிசாசு, இவைகள் தம்பிக்கும்.

RangaRakes
tamilnavarasam.com

## மோகனம்



படிக்கும் பெரும்புகழ் பஞ்சமி
 யன்பர் பகைஞர் தமை

யடிக்கு மிருப்புத் தடி கொண்டு
 பேய்க் கவர் குருதி

குடிக்குங்குடர்கொண்டு தோண்மாலை
 யிட்டுக் குலாவிமன்றில்

நடிக்கும் வராகி பதினு
 லுலகு நடுங்கிடவே



## மூலமந்திரம்

ஓம் நந்தி நந்தி குரு குரு சௌம் க்லீம் ஈம் வர வா ஹும்பட் ஸ்வாஹா உரு 1008

## ஆக்ருடணம்



இந்த யந்திரத்தை செப்புத்தகட்டில் எழுதி அஷ்டட கந்தத்தால் அபிஷேகம் செய்து ஒரு பீடத்தின் மேல் வைத்து பால் இளநீர் செங்கரும்பு இவைகளை நிவேதம் வைத்து செவ்வரளி புஷ்பத்தால் 1008-உரு ஜெபிக்க தியாகும் எல்லாவிதமான மோகனமும் ஆகும்

RangaRakes
tamilnavarasam.com

நடுங்கா வகையன் பர் நெஞ்சி
னிற் புக்கவர் நண்ணலரைக்
கொடுங்காளி யுண்ணக்கெடுக்
குங் குருதிகள் கொப்பளித்திட்
டிடும்பாரக் கொங்கையின் மீதே
யிரத்தத் திலகமிடும் தொடுங்
கார் மனோன்மணி வராகி நீலி
தொழிலிதுவே

## மூல மந்திரம்

ஓம் ஐம் க்லீம் சௌம் சிவசம்பு வராகி வா வா ஹும்பட் ஸ்வாஹா உரு 1008,

இந்த யந்திரத்தை செப்பு தகட்டில் எழுதி அபிஷேகம் செய்துபீடத்தின் மேல் வைத்து தூப தீபம் நைவேத்தியம் செய்து புஷ்பம் சாத்தி சுண்டல் வடை அதிரசம் இவைகளை வைத்து மூலமந்திரம் 1008 உரு ஜெபிக்க ஆக்ருடண சித்தியாகும் சகலவிதமான ஜீவஜெந்து முதல் மனிதர்கள் வரை நாம் இருக்கும் இடத்திற்கு வரும் படி செய்துக் கொள்ளலாம்.



## உச்சாடனம்




வேய்க்குல மன்னதின் டோளன்
வராகிதின் மெய்யன் பரை
நோய்குல மென்னவிடும்
புவிசெய் வார்தலை நொய்தழித்துப்
பேய்க்குல முண்ணப்பலிகொண்டு
போட்டு பிணக்குடரை
நாய்க்குல கெள்வக் கொடுப்பாள்
வராகியென் மனோன் மணியே



RangaRakes tamilnavarasam.com

## மூலமந்திரம்

ஓம் க்ஷம் க்ஷம் பைரவி நீலி ரீம் ரீம் ஹும்ப ஸ்வாஹா உரு 1008.

இந்த யந்திரத்தை அத்திப்பலகையில் வரைந்து அபிஷேகம் செய்து சந்தனம் குங்குமம் வைத்து புஷ்பத்தால் அலங்கரித்து தூபதீபம் நைவேத்தியம் வைத்து ஷெல்கண்ட மந்திரத்தை உரு ஜெபிக்க உச்சாடனம் ஆகும் தேவ கணங்கள் மனிதர் மிருகம் இவைகள் யாவும் உச்சாடனமாகும்

## பேத மாரணம்






நாசப்படுவார் நடுங்கப்
 படுவர் நமன் கயிறுல்
வீசப்படுவர் வினையும்
 படுவரிம் மேதினியோர்
ஏசப் படுவதி ரிழுக்கம்
 படுவரென் னேழை நெஞ்சே
வாசப் புதுமலர்த் தோளாய்
 வராகியை வாழ்த்திலரே

## மூல மந்திரம்

ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹும் ஹும் ரம் ரம் ஸம் ஸம் ஹும்பட் ஸ்வாஹா உருவு 1008.

இந்த யந்திரத்தை எட்டிப் பலகையில் வரைந்து அபிஷேகம் செய்து மஞ்சள் குங்குமம் வைத்து மஹா நைவேத்தியம் வைத்து 1008 உரு ஜெபிக்கவும் சித்தியாகும் இந்த யந்திரத்தை எந்த வீட்டில் பேய் பூதம் வாசம் செய்கின்றதோ அங்கு ஸ்தாபிதம் செய்ய பேசய் பிசாசுகள் ஓடி விடும்பேதனம்செய்யப் பட்டவர்களுக்குதகட்டில் எழுதி ரக்ஷையாக அணிய குண ம்.

RangaRakes
tamilnavarasam.com

# வசியம்




வாலை புவனை திரிபுரை
மூன்றுமிவ்வையகத்திற்
காலையு மாலையு முச்சியு
மாகவெக் காலத்துமே
ஆலயமெய்தி வராகி தன்
பாதத்தை யன்பிலுன்னி
மாலயன் தேவர் முதலான
பேர்களும் வாழ்த்துவரே



## மூலமந்திரம்

ஓம் க்லீம் பாசங்குச புஷ்ப்பாணீ பாலமோஹினி க்லீம் சௌம் மோகயா மோகயா ஹூம்பட் ஸ்வாஹா உரு-1008.

இந்த யந்திரத்தை வில்வப் பலகையில் வரைந்து குங்குமம் சந்தனம் மஞ்சள் முதலிய வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்துமஹா நைவேத்தியம் வைத்து மேல் கண்ட மந்திரத்தை 1008-உரு ஜெபிக்க சித்தியாகும் சகலமும் வசியமாகும்

# வித்துவேஷணம்




RangaRakes
tamilnavarasam.com

வருத்திப்பகைத்திரென் ளோடறி
யாமன் மூன்வான வர்க்கரச்
சிரிந்துப்புரமெரித்தோன்வாம
பாதத்துத் தேவியெங்கள்
கருத்திற் பயிலும் வராகியெம்
பஞ்சமி கண் சிவந்தாற்றி
பருத்திப் போதிக் கிட்ட தீப்போ
காணிம் பகைத்தவர்க்கே

## மூல மந்திரம்

ஓம் நமோ பகவதி மாதகிங் ஹ்ரீம்ஹ்ரீம் க்லீ
க்லீம் ஹும்பட் ஸ்வாஹா உருவு 1008.

இந்த யந்திரத்தை காரீய்யத் தகட்டி
வரைந்து விதிப்படி அபிஷேகம் செய்து மல
நைவேத்தியம் வைத்து பூஜை செய்து எதிரி பெ
எழுதி 108-உரு ஜெபித்து பாழ் அடை
கோவில்களில் புதைக்க அவர்கள்குடும்பம் பிரி
அலைவார்கள், அதை எடுத்து கிழித்து ஓ
ஜலத்தில் எரிந்து விட்டால் நிவர்த்தியாகும்



## மாரணம்




பாப்பட்ட செந்தமிழ்ப் பாவணர்
நின்மலர்ப் பாதந்தன்னிற்
பூப்பட்டதும் பொறிபட்ட
தோ நின்னையே புகழ்ந்து
கூப்பிட்ட துன்செவி கேட்கிலையோ
வண்ட கோளமட்டும்
தீப்பட்ட தேர்பட்டதோ நிந்தை
யாளர் தெருவெங்குமே

RangaRakes tamilnavarasam.com

## மூலமந்திரம்

ஓம் மாரீ பகவதி சிங் சிங் நசி மங் மங் வங் வங் ஹூம் பட்ஸ்வாஹா உரு-1008

இந்த மந்திரத்தை தாம்பூர தகட்டில் எழுதி பால் இள்நீர் வாசனைத் திரவியங்களால் அபிஷேகம் செய்து குங்குமம் மஞ்சள் வைத்து பீடத்தின் மேல் யந்திரத்தை வைத்து புஷ்பம் சாத்தி மகா நைவேத்தியம் வைத்து 1008உரு மூல மந்திரம் ஜெபிக்க மாரணம் சித்தியாகு எல்லாவிதமான மாரணங்களுக்கும் உபயோகமாகும்





# சிலை மாரணம்



## மூல மந்திரம்

எங்கு மெரியக் கிரிகள்
பொடி பட வெம்பகைஞர்
அங்கம் பிளந்திட விண்மண்
கிழிந்திட வார்த்தெழுந்து
பொங்குங் கடல்கள் சுவறிடச்
சூலத்தைப் போகவிட்டுச்
சிங்கத்தின் மீது வருவாய்
வராகி என் சிவசத்தியே



RangaRakes
tamilnavarasam.com

## மூல மந்திரம்

ஓம், திரிபுர பைரவி மாதங்கி க்லீம் க்லீம் ஸ்ரீம் க்ரவவம் ஹூம்பட் ஸ்வாகா உரு 1008

இந்த யந்திரத்தை செப்பு தகட்டில் எழுதி அபிஷேகம் செய்து முறைப்படி சோடச உபசாரம் செய்து மஹா நைவேத்தியம் வைக்கவும் 1008 உரு ஜெபிக்க ஷெ மந்திரம் சித்தியாகும் சிலை ஓடிய ரணங்களுக்கு எண்ணை மந்திரித்துதடவினால் குணமாகும்

## சந்துரு மாரணம்






சக்தி கவுரி மகமாயி
யாயியென் சத்துருவைக்

குத்தி யிரணக் குடரைப்
பிடுங்கிக் குலாவி நின்றே

இத்தசை யெங்கு நடுங்கக்
கிரிக ளிடிபடவே

நித்த நடித்து வருவாள்
வராகியென் னெஞ்சகத்தே

## மூல மந்திரம்

ஓம் துவானந்த வல்லி சத்ரு சங்காரீ ப்ராம் ப்ரீம் ம்ரும் ஹ்ூம்பட் சுவாஹா உரு 1008.

இந்த யந்திரத்தை செப்புத் தகட்டில் எழுதி முன் சொல்லியபடி அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து தூபதீபம் காட்டி ஷெ கண்ட மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க சித்தி யாகும் எல்லா வியாதிகளுக்கும் விபூதி போட வியாதி விலகும்.

RangaRakes
tamilnavarasam.com

# பூத மாரணம்



நெஞ்சகந் தன்னி னிறைந்திருக்
கின்ற நிர்க்குணத்தி
நஞ்சணி கண்டத்தி நாரா
யணிதனை நப்புவோர்க்கு
வஞ்சனை பண்ணி மதியாத
பேரை வாளுனை யுண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள்
வராகி குலதெய்வமே

# மூல மந்திரம்

ஓம் அம் ஆம் இம் ஈம் ரும் ரூம் பூதம் பிரேத பைசாச நாசனம் ஹூம் பட் சுவாஹா உரு 1008



# எதிரிமாரணம்

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி பிஷேக ஆராதனை செய்து மது மாமிசம்வைத்து 008-உருவு ஜெபிக்க இம் மந்திரம் சித்தியாகும் ய் பிசாசு மாரணம் ஆகும்



மது மாமிசந்தன்னைத் தின்பாளிவ
ளென்று மாமறையோர்
அதுவே யுதாசீனஞ் செய்திடுவார்
அந்த அற்பர்களை
சதிர்வா யடைத்திட வுள்ளங்
கலங்கக் கடித்தடித்து
விதிர்வாளில் வெட்டி யெறிவாய்
வராகியென் மெய்த் தெய்வமே.

RangaRakes tamilnavarasam.com

# மூல மந்திரம்

ஓம் நமோ பகவதி மயானருத்ரீ நரமுண் மாலினி அகோரி நசி நசி ஹூம்பட் சுவஹோ உ 1008

இந்த யந்திரத்தை செப்பு தகட்டில் வரைந் அபிஷேக ஆராதனை செய்துமஹா நைவேத்தியமு வைத்து ஷெ மந்திரத்தை 1008 உரு ஜெபிக் சித்தியாகும் துஷ்ட கிரகங்கள் ஏற்படும் எல்ல வித பீடைகளும் விலகும்.

# ஆக்ருஷணம்





ஐயுங் கிலியும் மௌனத்தொண்டர்
போற்ற வரிய பச்சை
மெய்யுங் கருணை வழிந்தோடு
கின்ற விழியுமலர்க்
கையும் |பிரம்பும் கபாலமுஞ்
சூலமுங் கண்ணெதிரே
வையந்துதிக்க வருவாள்
வராகிமலர்க் கொடியே

# மூல மந்திரம்

ஓம், ஐம் கிலீம் சௌம் திர புவனேஸ்வரி வராகி சிவசம்பு வராகி வாவா ஹ்ரீம் பட் சுவாஹா உரு 1008.

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி வாசனைத் திரவியங்களால் அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து ஷெ கண்ட மந்திரத்தை ஜெபிக்க எல்லாவிதமான ஆக்ருஷணமும் ஆகும்.

RangaRakes tamilnavarasam.com

# சத்துரு மாரணம்



## மூல மந்திரம்

மாளு மனமுந் தலையுங்
குலையத் தரியலர்கள்

மாளும் படிக்கு வரந்தரு
வாயுன்னை வாழ்த்து மன்பர்

கோளும் கையும் குறியார்கள்
வெற்றி குறித்த சங்கும்

வாளுங் கடகமுஞ் சூலமும்
மேந்தி வருந்துணையே

ஓம் திரிபுர தாண்டவி ஸ்ம்ஹார சக்தி பைர ரூபி த்ராம் த்ரும் வடுக பைரவி வா வா ஹூம் ப சுவாஹ உரு 1008.



இந்த யந்திரத்தை செப்பு தகட்டில் எழுதி அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து ஷெ கண்ட மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க சித்தியாகும்எல்லா விதமான ஏவல் பில்லிசூன்யங் களுக்கு விபூதிபோட விலகும்

# லோகமாரணம்



வருந்துணையென்று வராகியென்
றன்னையை வாழ்த்தி நிதம்

பொருந்துந் தகைமையை பூணு
த்வர்தம் புலாலுடலைப்

பருந்துங் கழுகும் வெம்பூதமும்
வெய்ய பிசாசுகளும்

விருந்துண்ணப் பட்டுக்கிடப்பர்
கண்டாயுடல் வேறுபட்டே

6

RangaRakes tamilnavarasam.com

# மூல மந்திரம்

ஓம் நமோ பகவதீ நங் மங் சிங் வா வா திரிபுர ஹும்பட் சுவாஹ உரு-1008.

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி அபிஷேகம் செய்து ஷ கண்ட மூலமந்திரத்தை 1008-உருவு ஜெபிக்க சித்தியாகும் இந்த மந்திரம் சித்தியானவர்கள் எல்லா விதமான மாரகத் தொழிலையும் செய்யலாம்

# ஏவல் சத்துரு மாரணம்






வேருக்கு நெஞ்சம் வினையும் வெவ்
 வேறு வெகுண்டுடலம்
கூறுக்கு நெஞ்சத்திற் செந்நிற
 மான குருதி பொங்கச்
சேருக்குங் குங்குமக் கொங்கையிற்
 பூகந்திலக மிடும்
மாருக்கு நேமிப் படையாடனை
 வணங்காதவர்க்கே

# மூல மந்திரம்

ஓம் சௌம் க்லீல் ஐம் ஹ்ரீம்ஆனந்த பைரவி வா வா ஹும்பட் சுவாஹா உரு 1008.

இந்த யந்திரத்தை செம்புக் தகட்டில் எழுதி அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து மேற்படி மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க சித்தியாகும் சித்தியானவர்கள் எல்லாவிதமான ஏவல் சத்ருக்களுக்கு தகடு கட்டினால் விலகும் குணமும் ஆகும்.

RangaRakes
tamilnavarasam.com

## மிருக மாரணம்




பாடகச் சீரடிப் பஞ்சமி
ஓடவிட்டே கையுலக்கை கொண்டு
யன்பர் பகைஞர் தமை
டேற்றி யுதிரமெல்லாம்
கோடகத்திட்டு வடித்தெடுத்
தூற்றிக் குடிக்குமெங்கள்
ஆடகக் கும்ப விணைக்கொங்கை
யாளெங்க ளம்பிகையே

## மூல மந்திரம்

ஓம் நமோ பகவதி பாச கட்க்க கேடக சூலதா ரணிபைரவ ரூபி லம் லம் டம்டம் ணம் ணம் ஹூம் பட் சுவாஹா உரு-1008.



இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து மேல் கண்ட மந்திரத்தை 1008உரு ஜெபிக்க சித்தி யாகும் பிறகு இந்த யந்திரத்தை எழுதி தாயத்திற் குள் போட்டு கட்டிக்கொண்டு வனத்திற்குச் சென்றால் மிருகங்கள் நம்மைக்கண்டால் ஒன்றும் செய்யாது.

## பால மாரணம்




RangaRakes
tamilnavarasam.com

தாமக் குழலும் குழையும் பொன்
  ஞேலையுத் தாமரைப்பூஞ்

சேமச் சுழலுந் துதிக்கவந்
  தோற்குச் செகமதனில்

வாமக் கரள களத்தும்மை
  யாதி வராகி வந்து

தீமைப் பவத்தைக் கொடுத் தாண்டு
  கொள்வாள் சிவசக்தியே

# மூல மந்திரம்

ஓம் க்ஷம் க்ஷம் ஹம் ஹம் பகவதி பவனாசயினே வா வா ஹூம்பட் சுவாஹா உருவு 1008.

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் அபிஷே கம் மஹா நைவேத்தியம் வைத்து மேற்படி கண்ட மந்திரத்தை 1008-உருவு தினம் ஜெபிக்க சித்தி யாகும் பிறகு 108உருவு தினம் ஜெபித்து வந்தால் சகலவிதமான பாவங்களும் விலகும்.



## பசாசு மாரணம்



ஆராகிலும் நமக்கே வினை
  செய்பவருடலம்

கூராகும் வாளிக் கிரையிடுவாள்
  கொன்னற வேணியான்

சீரார் மகுடத்தடியினை
  சோர்குந் திரிபுரையாள்

வராகி வந்து குடியிருந்தா
  ளென்னை வாழ்விக்கவே

ஓம் ஜூம் ஸம் பவந்தவினு சினிம்ருத்யுஞ் ஜெயா ம்ருத் யுஞ் ஜெயா ஸ: ஹூம்பட் சுவாஹா உரு 1008.

RangaRakes tamilnavarasam.com

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழு அபிஷேக ஆராதனை செய்து மஹா நைவேத்திய வைத்து 1008-உருவு ஜெபிக்க சித்தியாகும் பிற ஏவல் பூதபிசாசு துஷ்ட கிரகங்களுக்கு தகடுகட் குணமாகும்.

## சத்துரு மாரணம்




தரிப்பாள் கலப்பையென்னை
வராகியென் சத்துருவைப்

பொரிப்பாள் பொறியெழச் செந்தீயி
லிட்டுப் பொரிந்த தலை

நெரிப்பா டலைமண்டை மூளையை
தின்று பின்னெட்டுடலை

உரிப்பாள் படுக்க விரிப்பாள்
சுக்காக வுலர்த்துவளே



## மூல யந்திரம்

ஓம் நமோ பகவதி சாமுண்டி பூதபிரேத பிசாசு டாகினி மாரைய்யா மாரைய்யா ஹும்பட் சுவாஹா உரு-1008.

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி அபிஷே ஆராதனை செய்து மஹா நைவேத்தியம் வைத்து மேற்படி 1008உரு ஜெபிக்க சித்தியாகும் சர்வ வியாதிகளும் குணமாகும்

(௭)

## எதிரி மாரணம்





RangaRakes
tamilnavarasam.com

ஊராகிலு முடனுடாகிலு
மலாக் குற்றவரே

ஆராகிலும் நமக் காற்றுவரோ
- வடலாழிண்டு

காரார் கனத்த வுலக்கையு
முண்டு கலப்பையுண்டு

வராகி யென்னுஞ் சண்டப்
பிரசண்ட வடிவியுண்டே

## மூல மந்திரம்

ஓம் சண்ட பிரசண்ட பைரவரூபி அகோர வீரி ரீங் ரீங் டங் டங் சிங் ஹூம்பட் சுவாஹா உரு-1008

இந்த யந்திரத்தை செம்புத் தகட்டில் எழுதி அபிஷேக ஆராதனை செய்து மஹா நைவேத்தியம் வைத்து மேற்படி கண்ட மந்திரத்தை ஜெபிக்க சித்தியாகும் குழந்தைகளுக்கு வரும் பாலகிரக தோஷம் தேரை தோஷம் முதலிய சர்வ தோஷங்களுக்கும் விபூதி மந்திரித்துப் போடவும் யந்திரம் கட்டவும் சர்வ தோஷங்களும் நீங்கும்.

RangaRakes



## சேனை மாரணம்



உலக்கை கலப்பை யொளிவிடு
வாள் கடகாழிசங்கம்

வலக்கை யிடக்கையில் வைத்த
வராகியென் மாற்றலர்கள்

இலக்க மில்லாத வெழில் பெருஞ்
சேனை யெதிர்வரினும்

விலக்க வல்லாளொரு மெல்லிதன்
பாதம் விரும்புகவே

## மூல மந்திரம்

ஓம் நமோ பகவதே நாரணரூபி சங்கு சக்ர கதா சூல தாரணி வா வா ஹூம்பட் சுவாஹா உரு 1008.

tamilnavarasam.com

இந்த யந்திரத்தை செம்புத் தகட்டில் எழுதி அபிஷேக ஆராதனை செய்து மஹா நைவேத்தியம் வைத்து 1008 உரு ஜெபிக்க சித்தியாகும் இதை ரக்ஷையாக அணிந்துக் கொண்டால் விஷ ஜந்துக்கள் தீண்டாது சத்துருக்கள் வணங்குவார்கள்

## சத்துரு மாரணம்




தஞ்சமுன் பாதஞ் சரணே
கதியென்று சார்ந்தவர் மேல்
வஞ்சனை பில்லி கொடுதேவல்
சூனியம் வைத்தவரை
நெஞ்சம் பிளந்து நிணக்குடல்
வாங்கி நெருப்பினிலிட்
டஞ்சக் கரங் கொண்டப்பாள்
திரிபுரை யானந்தியே



## மூல மந்திரம்

ஓம் நமோ பகவதி பீமபைரவி நீளா தேவி கால கண்டி கபால சூல தாரணீ வா வா ஹூம்பட் சுவாஹா உரு 1008.

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் வரைந்து அபிஷேக ஆராதனை செய்து கும்பம் வைத்து மஹா நைவேத்தியம் வைத்து மேற்படி கண்ட மந்திரத்தைஜெபிக்க சித்தியோகும் இதைதகட்டில் எழுதி ரக்ஷையாக அணிய ஏவல் பில்லி சூன்யம் விலகும்

## கிரக மாரணம்




RangaRakes tamilnavarasam.com

அலைபட்டு நெஞ்ச மலைந்து யிர
சோர வலகை யால்
கொலைபட்டுடலங் கழுகுகள்
சூழக் குருதி பொங்கித்
தலைகெட்ட வயவம் வேருய்ப்
பதைப்புற்றுக் காவர் கண்டீர்
நிலைபெற்ற நேமிப் படையா
டனை நினையாதவரே

## மூல மந்திரம்

ஓம் நமோ பகவதி ரக்தாக்ஷி ரத்த சாமுண்டி கட் கட மருகடங்க சூலதாரணீ வாவா ஹும்பட் சுவாஹ உரு-1008

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி அபிஷேகம் ஆராதனைசெய்து மகா நைவேத்தியம் வைத்து மேற்படி கண்ட மந்திரத்தை 1008-உரு ஜெபிக்க சித்தியாகும் எல்லாவிதமான கிரக தோஷங்களுக்கும் ரக்ஷைக்கட்டகுணமாகும் நவ க்கிரக பீடை விலகும்



## பகைவர் மாரணம்



சிந்தை தெளிந்துனை வாழ்த்திப்
பணிந்து தினந்துதித்தே
அந்தி பகலுன்னை யர்ச்சித்த
பேரை யசங்கிதமா
நிந்தனை பண்ணி மதியாத
வூத்தர் நிணமருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய்
வராநகிங் பொற்கொடியே

## மூல மந்திரம்

ஓம் ஹும்பட் பீமா தேவி கதா கட்க பாசகால தாரணி ஹும்பட் சுவாஹ உரு-1008

RangaRakes tamilnavarasam.com

இந்த யந்திரத்தை செம்புத் தகட்டில் எழுதி விதிப்படி அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து மேற்படி கண்ட மூலமந்திரத்தை 1008 உரு ஜெபிக்க சித்தியாகும் இந்த தகட்டை ரக்ஷையாக அணிந்துக் கொண்டால் வாக்கு சித்தம் லக்ஷ்மீ கடாக்ஷம் சத்ருவசியம் உண்டாகும்

## படை மாரணம்




பொருப்புக்கு மாறு செய்யார்மி
யுந் தோடும் பொருப்பைவென்ற
மருப்புக்கு நேர்சொலுங் கொங்கையு
மேனியும் வாழ்த்துமெனை
திருப்புக் கடிய மனதிற்
குடிகொண்டேதிர்த்தவர்க்கு
நெருப்புக் குவாலெனக் கொல்வாய்
வராகியென் னிர்க்குணியே



## மூல மந்திரம்

ஓம் வீர சாமுண்டி மசான ருத்திரீ முசல கேடக கட்க்க பாச தாரணீ வாவா ஹும்பட் சுவாஹா உருவு 1008

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி அபிஷேகம் ஆராதனை செய்து மஹா நைவேத்தியம் வைத்து 1008 முறை மேற்படி கண்ட மந்திரத்தை ஜெபிக்க சித்தியாகும் அதன் பின் 1008-உருவு ரக்ஷை விபூதி இவைகளால் பிரயோகம் செய்ய எல்லாவிதமான பூதப்படைகள் நாசமாகும்

## மோஹன மாரணம்





RangaRakes
tamilnavarasam.com

தேறிட்ட நின்மலர்ப் பாதார
விந்தத்தைச் சிந்தை செய்து
நீறிட்டவர்க்கு வினைவருமோ
நின்னடிய வர்பால்
மாறிட்டவர் தமை வாளாயுதங்
கொண்டு வாட்டி யிரு
கூறிட்டெறிய வருவாய்
வராகி குலதெய்வமே

## மூல மந்திரம்

ஓம் காம ரூபி கலீம் சௌம் ஐம் பாச அங்குச புஷ்பகோதண்ட ஹ்ர ஸ தே பாலாத்ரிலோக்ய மோஹினி வாவா ஹு்ம்பட் சுவாகா 1008.

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் அபிஷேகம் செய்து மஹா நைவேத்தியம் வைத்து ஷ கண்ட மந்திரத்தை 1008 உருவு ஜெபிக்க சித்தியாகும் பிறர் செய்த மோஹன மந்திரத்தில் கட்டுப்பட்டவர்களுக்கு விபூதி மந்திரித்துப் போட்டால் குணமாகும் இவர்களை கண்டவர்கள் யாவரும் வசியமாவார்கள்.

RangaRakes



## உச்சாடணம்



நரி பரி யாக்கிய சம்புவின்
பாகத்தை நண்ணியமான்
அரியயன் போற்று மபிராமி
தன்னடி யார்க்கு முன்னே
சரியாக நின்று தருக்கஞ்செய்
மூடர் தலையை வெட்டி
யெரியா யெரித்து விடுவாள்
வராகி யெனுந் தெய்வமே

tamilnavarasam.com

ஓம் நமோ பகவதேபாலமோஹி த்ரி புவனே ஸ்வரீ சிங்சிங் வங் வங் ஹ ம்பட் சுவாஹா உரு 1008.

## மூல மந்திரம்

இந்த யந்திரத்தை செம்பு தகட்டில் எழுதி விதிப்படி அபிஷேக ஆராதனை செய்து சுத்தமாயிருந்து 1008 உருவு ஜெபிக்க எல்லாவிதமான உச்சாடனமும் ஆகும்.

## பாலா திரிபுரா மஹா யதிந்ரம்




வீற்றிருப் பாணவ கோணத்திலே
நம்மை வேண்டுமென்று
காத்திருப்பாய் கலீவந்தணு காமலென்
கண்கலக்கம் பார்த்திருப்
பாளல்ல ளெங்கே யென்றகுங்குச
பாசங்கையில் கோத்திருப்

RangaRakes



பாளிவ ளே யென்னை
யாளுங் குலதெய்வமே
சிவஞான போதகி செங்கைக்
கபாலி திகம்பரி நற்
றவமாரு மெய்யன் பர்க் கேயிடர்
சூழுந் துரியலரை
அவமானஞ் செய்யக்கணங்களை
யேவு மகோரியிங்கு
நலமாக தந்தெனைக் காக்குந்
திரிபுர நாயகியே

## மூல மந்திரம்

ஓம், ஐம் க்லீம் சௌம் சௌம் க்லீம் ஐம் ஸ்ரீ பால த்ரிபுரா மமவசம் குரு குரு சுவாஹா.

## ஸ்ரீ சூக்தமஹா யந்திரம்




tamilnavarasam.com

ஓம், அஸ்யஸ்ரீ ஸ்ரீசூக்த மஹா மந்திரஸ்ய பஹவான் ஸ்ரீர்கர்த மசிக்லீ பார்க்க வரிஸினி காயத்ரீச் சந்த: ஸ்ரீலஷ்மீ நாராயணே தேவதால ஜஜாபீ ஜமஸ்ரத்தல் ஸக்தி மேதா கீலகம்மம ஸ்ரீலஷ்மி நாராணபரசாத சித்யமிர்தே ஜெபே வினியோக :

## கரன்யாஸம்

க்ராம், அங்குஷ்டாப்யாம் நம :
ஸ்ரீம், தர்ஜி நீப்யாம் நம :
சரும், ந்த்யமாப்யாம் நம :
ச்ரைம், அநாமிகாப்யாம் நம :
சர. கரதல கரருப்ஷ்டாப்யாம் நம :

## அங்க ந்யாஸம்

ச்ராம் ஞானய ஹ்ருதயாயா நம
ஸ்ரீம் ஐஸ்வர்யாய சிரேஸேஹ்வாஹா
ச்ரூம் சக்ந்யை வௌஷட்
ச்ரௌம் தேஜ்ஸே நேத்ராப்யாம் வௌவஷட்
ச்ரைம் பாலாய கவசாயஹும்பட்
ச்ர வீர்யாய அஸ்த்ராயபட்
பூர் புவ ஸ்வரோம் இதி திக்பந்த

## ந்யாஸம்

ஸரஸிஜ நயனே சரோஜ ஹஸ்தே
தவள தராம் சுககந்தமால்ய சோபே
பஹவதீ ஹரி வல்லபே மனோஞே
த்ரிபுவனே பூதஹரிப் ரசீதவ மஹ்யம்



விஷ்ணுபத்னீம் க்ஷமாம் தேவீம்
மாதிவீம் மதவப்ரியாம
லக்ஷ்மீம் பரிய சகீம் தேவீம்
நமாம் அச்சுத வல்லபாம்

## பஞ்சோபசாரம்

லம். ப்ருதிவியாத்மனே-கந்தம் சமர்ப்பயாமி
ஹம், ஹாஸாத்மனே-புஷ்பம் பூஜையாகி
ரம்-அக்னியாதமனே-தீபம் தாஜ்ஜயாமி
ஸம் யாம் வாத்மனே-தூபம் ஆக்ராப்யாமி
யம் அம்ருதாத்மனே-அம்ருதம் நிவேதயாமி
ஸம் ஸர்வாத்மனே-ஸர்வோபாஸார பூஜை ஸ்மர்ப்பயா

## மூல மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹரீம் க்லீம் கமலேகமலலேயே ப்ரஸீத ப்ரீஸீத ஸ்ரீம் ஹக்ம்க்லீம் ஓம் மஹாலக்ஷ்மியை நம உரு-108.

ஓம் மஹாலக்ஷ்மீஸ்ஸே வித்மஹே விஷ்ணு பத்னீ ஸாதீமஹி தன்னோ லக்ஷ்மீ ப்ரசோதயாத் உரு 108

## ஸ்ரீ சூக்த மஹா மாரணம்

ஓம் ஸ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
ஹிரண்யவர்ணாம் ஹரிணீம் :
ஸ்வாரைஜி தஸ்ரஜாம் :
சந்தராம் ஹ்ரண்யீம் லக்ஷ்மீம்
ஜாதவேதோமம் ஆவ :
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்

RangaRakes
tamilnavarasam.com

தாம்ம ஆவா ஜாதவேதோ லக்ஷ்மீம்
அனபகா மினிம் யஸ்யாம் ஹிரண்யம்
விந்தேயம் காமச்வம் புருஷானஹ
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம் ஓம் ஹரீம் க்லீம்
அஸ்வ பூர்வாம் ரதமதயாம்
அஸ்திருக ப்ரபோதி நீம்
ஸ்ரீயம் தேவி முபக்வயே ஸ்ரீர்மாதே
ஜுஸதாம் க்லீம் ஹரீம் ஸ்ரீம் ஓம்
ஓம் ஸ்ரீம் ஹம் க்லீம்
காம் ஜோஸ்மிதாம் ஹரண்யபிரகார
மாத்ராம் ஜவலந்தீம் த்ருப்தாம்தாம்தர்
(பயந்தீப்
பத்மேஸ்திதாம் பத்மவாணும்
த்வாமிஹோர் பக்லயே ஸ்ரீயம்
க்லீம் ஹரீம் ஸ்ரீம் ஓம்
சந்த்ராம்ப்ரபாஸாம்யஸாஜ்வலந்தீம்
ஸ்ரீயம் லோகேதேவஜுஸ்ட முதாராம்
தாம்பத்மநேமீம் சரணமஹம்பிரபத்யே
லக்ஷிமீர்மே நஸ்யதாந்த்வாம் வ்ருணே
ஸ்ரீம் ஹரீம் க்லீம் ஓம்
ஓம் ஸ்ரீம் ஹரீம் க்லீம்
ஆதித்த வர்ணே தபஜோணி ஜாதோ
வனஸ்பதி ஸ்தவ வரு க்ஷோதிபில்வா
தஸ்யா பலானி தபாஸானுதந்து
மயாந்தராயச்ச பாக்ய அலக்ஷ்மி
க்லீம் ஹரீம் ஸ்ரீம் ஓம்





ஓம் : ஸ்ரீம் : ஹரீம் : க்லீம்
உபைது மாம் தேவஸ ; கீர்த்திச்ச பணிநாஸ
ப்ராதுர் பூதோஸ்மி ராஸ்டேஸமின்
கர்த்தீம் வ்ருத்தீம் ததாதுமே
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம், ஸ்ரீம்: ஹ்ரீம் க்லீம்
க்ஷுத்பிபாஸாம் மாலாம் ஜேஸ்டாம்
அலக்ஷ்மீம் நாஸயாம்யஹம் ஆபூதீம்
ஸம் வ்ருத்தம்ஸ ஸர் வாண்ணிர் நுதமே
ஹ்ருகே, க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம் ஸ்ரீம், ஹ்ரீம் க்லீம்
கந்தத் வாரம் துராதர் ஸாம்
நித்யபுஸ்டாம் கரீஸணீம்
ஈஸ்வரீம் சாவ பூதானும்
த்வாமி ஹோா அக்ப வயேஸ்ரியம்
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம், ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
மனஸக்காக ஆக்ஷதீம் வாஷஸ,
ஸத்ய மஷி மஹி பசுணும் ருபமன்னஸ்ய
மயி ஸ்ரீ ஸ்ரீயதாம் யஸ:
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம், ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
கர்த்தமேன பரஜா பூதா மயீஸம்பவ
கர்த்தமா ஸ்ரீயம் வாஸயமேகுலே மாதரம்

பத்மமாலினீம் க்லீம்ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம்' ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்

ஆபகஸ்ரு ஜந்தஸ் நிக்தானி சிக்லீதா
வாஸமே ஹருஹே நிஷதேவீம் மாதரம்

ஸ்ரீயம் வாசயமேகுலே க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்
ஓம் ஸ்ரீம் ஹரீம் க்லீம்

ஆர்த்ராம் புஸ்கரணீம் புஸ்டிம்ஸ்வர்ணும்
ஹேமமாலீனிம் சூர்யாய் ஹிரண்மயீம்

லக்ஷிமீம் ஜாதவேதோ மம ஆவஹா
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
ஆர்த்ராம்ய காணீம் யஸ்பீம்

பிங்கலாம் மத் மமாலிணீம்
சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷமீம்

ஜாதவே தோமம ஆவஹ
க்லீம் ஸ்ரீம் ஹரீம் ஓம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
தர்ம்ம ஆவஹ ஜாதவேதோ
லக்ஷ்மீம் மபைகாமிணீம் யஸ்யாம்
ஹிரண்யம் ப்ரபூதாம்காவோதாஸ்யாவான்
விந்தேயம் புஷானகம்,
க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்



# ஸ்ரீ சூக்த மஹா மந்திர பூஜைவிதி

இந்த ஸ்ரீசூக்த மஹா மந்திரத்தை மூலமந்திர ஸஹிதம் 2000 உரு ஜெபிக்க சித்தியாகும் அதன் பின் பக்கத்தில் ஒரு பகுதி ஓமம் செய்து பிரயோகிக்கலாம் ஒரு சுத்தமான அறையில் சுவற்றில் சுண்ணாம்பு அடித்து சுத்தமாக மெழுகி கோலமிட்டுஒரு பீடம் ஸ்தாபித்து வெள்ளி தகட்டில் க்ஷ யந்திரம் எழுதி பீடத்தின் மீது வைத்து அதற்கு முன்புறம் ஒரு வாழை இலைபோட்டு ஒருபடி பச்சரிசிக் கொட்டிஅதன் மீதுகும்பம் ஸ்தாபித்து கலசபூஜை ஆசன பூஜை கனேஸ்வர பூஜைமுறைபடி செய்து இந்த ஸ்ரீ சூக்தமஹா மந்திரத்திற்கு ரிஷிசந்தஸ் பீஜசக்தி கிலகம்அதன்முன் பூர்ணகும்பம்வைத்து பால் பழம் தேங்காய் கூடம் பத்தி பொங்கல் சுண்டல் வடை பாயாசம்இவைகளைபடைத்து தூபதீபம் காட்டி கிழக்குமுகமாய் மான் ஆசனத்தில்அமர்ந்து தினம் 108 உரு வீதம் 12000 உரு ஜெபித்தால் மந்த்ர சித்தியாம் அதன் பிறகு எல்லா ப்ரயோகமும் செய்யலாம் சகல ஸௌபாக்யம் உண்டாகும் லக்ஷ்மி கடாக்ஷம் பெருகி செல்வம் அதிகரிக்கும் தினம் தவறுமல் பன்னிண்டாயிரம் உரு செபித்துக் கொண்டு இந்த தேவியின் முன்பு முக்கோண காரமாக ஒரு ஓமகுண்டலம் ஸ்தாபித்து வில்வக் குச்சிகளும் வில்வப் பழமும் நெய்யில்நனைத்து ஹோமம் செய்ய வேண்டும். மூன்று நாள் ஹோமம் செய்து மூன்றுவது நாள் ஓர் உத்தம சுமங்கிலியை அழைத்து வந்து புது வஸ்திரம் கொடுத்து போஜனம் செய்விக்க

RangaRakes tamilnavarasam.com

வேண்டும் அதன்பின் பிரதி தினமும் தவறாமல் மாலை நேரத்தில் ஸ்ரீ சூக்தமஹா மந்திரத்தை 15-தடவை ஜெபித்து தூபதீப நைவேத்தியினால் ஆராதிக்க இப்படி செய்துக்கொண்டு வந்தால் குடும்பத்திலுள்ள எல்லாவித கஷ்டங்களும் நீங்கி செல்வம் பெருகும் புத்திரலாபம் பசுலாபம் வியாபாரவிருத்தி உத்தியோகஉயர்வுகளுடன் நிவாரணை விஷரோகபயம் நீங்கி தீர்க்காயு சுடன் மங்களம் உண்டாகும் இந்த மந்திர பூஜைக்கு மஹா நைவேத்தியம் வடை சுண்டல் பாயாஸம் பொங்கல் பழவகைகள் வாசனை த்ரவியம் இவைகளை லோபமில்லாமல் மன சந்தோஷத்துடன் சுத்தம் பக்தி ஆசாரம் திடசித்தத்துடன் ஜெபிக்க சகல சித்தியும் உண்டாகும்

இந்த அருமை வாய்ந்த மந்திரத்தை ஒவ்வொரு இல்லம் தவறுல் பூஜித்துசுகப்பட வேண்டுமென்பது எனது ஆவல் ஆதலால் இதில் அடங்கியுள்ள ஐம்பத்தி யொரு மந்திரங்களையும் அதன் பிரயோகங்களையும்! இங்கு விளக்கமாகக்கொடுக்க பட்டு இருக்கிறது

## ஸ்ரீ லக்ஷ்மி மந்திரம்

